பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

சுடர்: 4 சுக்கில ஞஸ ஆடி மீ 08 உ. ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 19 (23 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 195

செல்லையா
சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை
வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்செய்து
கொடுக்கப்படும்.

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road,
JAFFNA.
T. Phone: 23794

## 1,200 ஆங்கில ஆசிரியர்கள் செப்டெம்பரில் நியமனம்

கொழும்பு, ஜூலை 23

ஆயிரத்து 200 ஆங்கில ஆசிரியர்களுக்கு செப்டெம்பர் முதல் நியமனம் வழங்கப்பட உள்ளது.

கல்விச் சேவைகள் ஆணைக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூலையில் நடந்த எழுத்துப் பரீட்சையின் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

இந்த மே மாதப் பரீட்சை முடிவுகள் கல்விச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

செப்டெம்பரில் நியமனம் வழங்க தற்போது முடிவு செய்யப்பட்டிருப்பினும், இது சம்பந்தமான நேர்முகப் பரீட்சைகளை கல்விச்சேவை ஆணைக்குழு நடத்துவதா? அல்லது மாகாண சபைகள் நடத்துவதா? என்பது பற்றி அரசு இன்னமும் தீர்மானிக்கவில்லை.

## திருநகரில் இரு சிறுவர்கள் மிதிவெடியில் சிக்கிக் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 23

கிளிநொச்சி திருநகர் பகுதியில் நேற்று மிதிவெடி ஒன்றில் சிக்கி இரண்டு சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் பின்புறமாக உள்ள பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

ச. யசோதரன் (வயது 5), மணிவேல் அன்புமுகன் (வயது 11) ஆகிய இருவருமே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் யசோதரன் பாதம் அகற்றப்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டார்.

(உ-10-9)

### அமிர், யோகேஸ் கொலைச்சம்பவம்:

## 3 சடலங்களையும் புதைக்க கொழும்பு நீதிவான் பணிப்பு

கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலைகள் தொடர்பான சம்பவத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்றுபேரின் சடலங்களை கனத்தை பொது மயானத்தில் புதைக்க வேண்டும் என்று கொழும்பு மேலதிக நீதிவான் ஜனாப்.எம். எம். ஏ. சபூர் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

இவர்களின் சடலங்களை உறவினர்கள் எவரும் இன்னும் உரிமை கோரவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இம் மரணங்கள் பற்றிய மரணவிசாரணைமுடிவில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

துப்பாக்கிச்சூடு காரணமாக இவர்கள் உயிரிழந்தனர்என்று வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பாக். வெளியுறவு அமைச்சர் நேற்று கொழும்பு விஜயம்

கொழும்பு, ஜூலை 23

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகூப்கான் நேற்று கொழும்புக்கு விஜயம் செய்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவை அவர் சந்தித்துப் பேசினார். பின்னர் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவையும் அவர் சந்தித்தார்.

சார்க் மாநாட்டை இலங்கை பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

அதைக் கைவிடும்படி கோருவதாகவே பாகிஸ்தான் அமைச்சரின் விஜயம் அமைந்தது. (உ-எ)

## பல்கலைக்கழக மாணவியை விடுவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவி செல்வி நடராஜா இராஜாம்பிகை கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்தும், இம் மாணவியை உடனடியாக விடுதலை செய்யக்கோரியும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த மாணவி கடந்த 20ஆம் திகதியன்று இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு தற்போது கோண்டாவில் முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ் பல்கலைக்கழக மாணவியரைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்திருப்பது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு

யாழ் நகரில் நேற்று துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அண்மையில் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலை கழக செயலதிபர் உமாமகேஸ்வரனின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவே துக்க தினத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்றுக் காலையில் நகர் வழமைபோல் இயங்கத் தொடங்கியது. எனினும் பின்னர் தேனீர்க் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகள் மூடப்பட்டன. படக்காட்சிகளும் ரத்துச் செய்யப்பட்டன. மினிபஸ்கள் சேவையைக் குறைத்துக் கொண்டன.

வ. பி. போ. சபையும் 12 மணியுடன் தனது சேவைகளை மட்டுப்படுத்திக் கொண்டது. ஆயினும் தூர இடங்களிலிருந்து வந்த பஸ்கள் சேவையைத் தொடர்ந்தன.

(ஒ-10-9)

### அமைதிப்படையின் ஒருபகுதியை உடனே விலக்கினால்

# காலக்கெடுவை தளர்த்த இலங்கை இணக்கம்!

## பிரேமாவின் கடிதம் ராஜீவிடம்

புதுடில்லி, ஜூலை 23

இந்திய அமைதிப்படையை இலங்கையிலிருந்து விலக்குவதற்குத் தான் விதித்திருந்த காலக்கெடுவைத் தளர்த்த இலங்கை அரசு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

அடுத்த சில தினங்களில் தனது துருப்புகளில் ஒரு பகுதியை இந்திய அரசு இலங்கையிலிருந்து விலக்கிக்கொள்ளுமானால் -

அமைதிப்படை விலகல் பற்றிய கால அட்டவணையைத் தயாரிக்கும் பேச்சுக்களை ஆரம்பிக்க இலங்கை தயார் என்று இலங்கை ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்,

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜூலை 19 ஆம் திகதியிட்டு இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா அனுப்பி வைத்த கடிதத்திலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் கடிதத்தை புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் திரு. ஸ்டான்லி கல்பகே, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் நேற்றுக் கையளித்தார்.

இக்கடிதத்தில் அமைதிப் படை விலகல் பற்றிய காலக்கெடு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்குமிடையே யான நெருக்கடியில் ஜனாதிபதி பிரேமதாஸாவின் கடிதம் ஒரு திருப்புமுனையாக அமையும் என அரசியல் அவதானிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எம். பிக்கள், கட்சி நிர்வாகிகளின் பாதுகாப்புக்காகவே ஆயுதங்கள்

### ஈரோஸ் பாலகுமாரன் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், கட்சி நிர்வாக உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு தேவை என்பதன் காரணமாகவே நாம் இலங்கை அரசிடம் இருந்து சட்டரீதியாக ஆயுதங்களைப் பெற்றுக்கொண்டோம்.

இவ்வாறு ஈரோஸ் அமைப்பின்பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நாம் நெருக்கமாக உள்ளதன் காரணமாகவே எமக்கு இந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிவா சாட்சியம்

கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம், யாழ். முன்னாள் எம். பி. வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் மரண விசாரணையில் சம்பவத்தின் போது படுகாயமடைந்த கூட்டணியின் முன்னாள் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் சாட்சியமளித்தார்.

இவரது சாட்சியத்தை கொழும்பு மேலதிக நீதிவான் எம். எம். ஏ. கபூர் பதிவு செய்தார். (உ-எ)

## ஈ. பி. ஆர். எல். எப். இயக்க எம். பிக்களுக்கும் துப்பாக்கி

### வழங்கத் தயார் என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 23

ஈ. பி. ஆர். எல். எப்பைச் சேர்ந்த எம். பிக்களுக்கும் தானியங்கித் துப்பாக்கிகளை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

வெளியுறவு அமைச்சரும், பாதுகாப்புத் துணை மைச்சருமான ரஞ்சன் விஜேரத்தின நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாண சபை அமைக்கப்பட்டதன் பின்னர் தங்களின் 44 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்று ஈரோஸ் இயக்கம் சொன்னதால் தான் அவர்களுக்குத் தானியங்கித் துப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தானாக வகுப்பேற்றம் இனிமேல் கிடையாது

கொழும்பு, ஜூலை 23

மாணவர்கள் தானாக வருட இறுதிப் பரீட்சையில் வகுப்பேற்றப்படமாட்டார்கள் என்று கல்வி துணை அமைச்சுச் செயலாளர் கேர்னல் வி. எஸ். குடலிகம தெரிவித்தார்

திறமை, ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் வகுப்பேற்றம் இடம்பெறும் என்று கேர்னல் குடலிகம சொன்னார்.

கடந்த 25 ஆண்டுகளாக இருந்த—தானாக வகுப்பேற்றும் முறை—தோல்வி கண்டுவிட்டதாகவும் சொன்னார்.

தேர்ச்சி பெறத் தவறிய மாணவருக்கு மீண்டும் பாடங்கள் நடத்தப்படும். அவர்களில் முன்னேற்றம் காணப்பட்டால் அவர்களும் வருட நடுப்பகுதியில் வகுப்பேற்றப்படுவர் என்றும் அவர் சொன்னார். (உ-எ)

## முச்சந்தி முரளி



பள்ளிக்கூடம் போகாமலேயே பாஸ் பண்ணலாம் என்ட எண்ணத்திலே மண் விழுந்திட்டுது கண்டியளோ.!

### சுபநேரம்

23—07—1989

ஆடி (8 — ஞாயிற்றுக்கிழமை நக்ஷத்திரம்: பூரட்டாதி சுபநேரம்:

09.02 முதல் 10.32 வரை ராகுகாலம்:

04.32 முதல் 06.02 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் திருவிழா

பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலய வருடாந்தஉற்சவம் இம் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இன்று 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுப்பலி யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு மைக்கல் சுவாமிஅடிகள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

அதனை தொடர்ந்து பங்குத் தந்தை அருட்திரு இ. மேரி யோசப் அடிகளாரால் திருச் சுரூப ஆசீர்வாதம் வழங்கப் படும்.

(சிறப்பிதழ் 3 ஆம் பக்கத்தில்)

## அரபிக் கடலில் நாசகாரி; இந்திய கடற்படை பயிற்சி

புதுடில்லி, ஜூலை 23

இலங்கையின் மேற்குப் பக்கத்தில் உள்ள அரபிக் கடல் பிரதேசத்தில் இந்தியக் கடற்படையினர் தற்போது மேற்கொண்டுவரும் பயிற்சிகள் 7 முதல் 10 நாட்கள் வரை நீடிக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தியக் கடற்படையின் அதிரடிப்பிரிவு, 'விராட்' என்னும் புதிய விமானத் தாங்கிக் கப்பல் தலைமையில் பயிற்சி மேற்கொண்டு வருகிறது.

போக்லாந்து யுத்தத்தில் பிரிட்டிஷ் கடற்படையின் சார்பில் ஈடுபட்ட 'ஹெர்ம்ஸ்' என்ற போர்க் கப்பலையே இந்தியா வாங்கி 'விராட்' என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்துவரும் 10 தினங்களில் என்ன நடக்கப்போகிறது?

### அமைச்சர் அத்துலத்தின் அச்சம்

கொழும்பு, ஜூலை 23

நெருக்கடி நிலை மிகவும் மோசமடைந்து வருகிறது. அடுத்து வரும் ஒன்பது பத்து தினங்களில் என்ன நடக்கப் போகிறது என்பது குறித்து நான் கவலைப்படுகின்றேன்.

அமைச்சர் அத்துலத் முதலி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையின் மீதான விவாதத்தில் பேசுகையில் இப்படி அச்சம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற கிரனேட் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் நான் எனது கடைசி உயிலை எழுதி வைத்துவிட்டேன்.

பத்திரிகைத் தணிக்கை சில வாரங்களுக்கு மட்டுமே. தணி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு ரயில் சேவைகள் திடீர் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்- கொழும்புக்கு இடையிலான சகல ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ரயில் உதவிச் சாரதி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியது தெரிந்ததே. இதன் காரணமாக ரயில்வே ஊழியர்கள் வடபகுதியில் அனுராதபுரத்திற்கு அப்பால் சேவையாற்ற மறுத்து வருகின்றனர்.

இதனை நேற்று யாழ்நகரை நோக்கி வந்த பயணிகள் ரயில் அநுராதபுரத்துடன் சேவையை நிறுத்திக்கொண்டது. பயணிகள் அனைவரும் அனுராதபுரத்திலிருந்து பஸ்கள் மூலமே பயணத்தை தொடர்ந்தனர்.

எரிபொருள், மற்றும் உணவுப்பொருட்கள் சகிதம் இங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஒப்பந்தத்தின் பின்னர்

## ஈரோஸ் உறுப்பினர்கள் 64 பேர் இதுவரை கொலை

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை 64 ஈரோஸ் போராளிகள் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைகளில் ஒன்றுக்குக் கூட எவரும் உரிமை கோரவில்லை. ஜூன் மாதத்தில் மட்டும் 22 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

-இவ்வாறு ஈரோஸ் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## ஸ்ரீதேவி, அமிதாப்பச்சன் புதிய படங்களில் நடிக்க தடை

பம்பாய் ஜூலை 23

அமிர்தாப்பச்சன், ஸ்ரீதேவி ஜெயப்பிரதா உட்பட 39 நடிக நடிகைகள் புதிய படங்களில் நடிக்கஇந்திப்பட அதிபர்களைக் கொண்ட படத்தயாரிப்பாளர் சங்கம் தடை விதித்துள்ளது.

இத்தடை ஜூலை 10 முதல் அமுலுக்கு வந்தது.

தென் இந்திய திரைப்பட வர்த்தக சபை இதை ஜூலை 31 முதல்அமுல் படுத்தஇருக்கிறது

கைவசம் உள்ள படங்களை நடித்து முடித்து விட்டே புதிய பட ஒப்பந்தங்களில் இவர்கள் கையெழுத்திட வேண்டும் என்று தடை உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

இதை மீறுகிற நடிகர் நடிகைகள், தயாரிப்பாளர் மீது நடவடிக்கைஎடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

T. V. Colour Deep Freezer மற்றும் மின்சார உபசரணங்கள் பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத்தளபாடங்களும் Type-writer Singer மெஷின் Bicycle குத்துவிளக்கு மற்றும் பல விற்பனைக்குண்டு. அத்தோடு நியாயமான விலையில் உங்கள் வீட்டுப் பொருட்களை வாங்குபவர்கள் Supeka 343 பருத்தித்துறை ரோட், நல்லூர். (11589)

புதிய C. G. 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். Dr. சிவசுப்பிரமணியம், பெரிய ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம். (1314)

பன்ரம் கோழிகளும் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. இ. பரஞ்சோதி, இணுவில் ரோட், வசந்தம் மானிப்பாய். (1313)

நல்ல நிலைமையிலுள்ள J. V. C. வீடியோ டெக் Prosco வீடியோ டெக் Phillipo வீடியோ டெக் Akai O. D O. டெக் Jamaha O. D. O. டெக் இங்கிலிஸ் இரும்புப்பெட்டி வீடியோக் கடைக்குத் தேவையான கவுண்டர் மேசை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி. (1310)

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

புரொயிலர் இறைச்சிக் கோழி, பேட்டுக்கோழி, சேவல், விருத்துக் குஞ்சு, சூப் குஞ்சு சுத்தம் செய்து கொடுக்கப்படும். வான்கோழி, வான்கோழி முட்டை, பெண்டம் கோழி முட்டை, நல்ல இன பேன்டல் புறா, அவுல், சொக்சப்பியன் ஆகியன விற்பனைக்கு உண்டு. V.K.S. பாம், No. 12, கனகசபை ஒழுங்கை, சிவலிங்கப்புளியடி. (11591)

**ஆசிரியர் தேவை**

க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்கு ஒரு மாணவனைத் தயார் செய்வதற்கு ஆசிரியர் தேவை. க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்தவர்கள் அல்லது ஓய்வு பெற்று மாநகரசபை எல்லைக்குள் உள்ளவர்கள் 24 ஆம் திகதி திங்கள் காலை நேரில் வரவும். 48/9 முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (11586)

**கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM**

(DEKALB) பிறவுண் பேடு சேவல் (COBB) புரொயிலர் குஞ்சுகள் (26 - 7 - 89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதியவும். இல 9, கந்தையா லேன், கல்லுகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு:- இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை. (1309)

**Typewriter**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

**கல்வி**

S. K. ஜீவமோகனின் G.C.E. (O/L) 89 விசேட கணித, விஞ்ஞான வகுப்புக்கள் கோப்பாய் சைன் இன்ஸ்ரிரியூசனில் நடைபெறுகின்றன. உடன் தொடர்பு கொள்க. சைன் இன்ஸ்ரிரியூசன், கோப்பாய். (11424)

**தவறிவிட்டது**

கங்காதரன் அரிச்சந்திரன் அடையாள அட்டை இல. 602882942 V அத்துடன் சாரதி லைசென்சும் தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (11596)

**கல்வி**

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 22 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் வீடுகளிற் சென்று விஷேட சித்திக்கு 2 மாதத்திற்குள் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, சச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டு குளி. (1312)

**ஒத்துமாறல்**

கொழும்பு மாவட்டத்தில் கற்பிக்கும் பயிற்றப்பட்ட கணித ஆசிரியை யாழ். கல்வி மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியையுடன் ஒத்துமாற விரும்புகிறார். சொக்கலிங்கம் ஓய்வுபெற்ற தலைமையாசிரியர், ஏழாலை மேற்கு, ஏழாலை. (11578)

**மணமகன் தேவை**

யாழ். இந்து வேளாளர் 34 வயது அழகு, குணம், செல்வம் கொண்ட கொழும்பில் தொழில் பார்ப்பவரும் கொழும்பில் வீடு உள்ளவரும் நன்றாக ஆங்கிலம் பேசக்கூடியவரும் பொறுப்புகளற்ற நிலையில் விவாகரத்துப் பெற்ற பெண் நல்லகுணமுடைய மணமகனைத் தேடுகின்றார். பொறுப்புகளற்ற நிலையில் விவாகரத்துப் பெற்றவரும் வெளிநாட்டில் உள்ளோரும் கருதப்படுவர், சாதகத்துடன் முழு விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். No. 568 C/o உதயன். (1311)

**MUSIC**

Piano and Accordian Lessons for Females Mrs Thomas St. Mary's Road, Sillalai. (1058)

# திருமண நன்றி நவிலல்

எமது திருமணத்தின் போதும் விருந்து உபசாரத்தின் போதும் வருகை தந்து நல்லாசிகள் வழங்கியவர்களுக்கும், வாழ்த்துக்கள் அனுப்பியவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திரு. திருமதி சத்தியசீலன்
182/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[C/3082]

ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

# மொறிஸியஸ்

## 1989 டிசம்பர் 04-08 ஆம் நாட்கள்


மேற்குறித்த மாநாட்டிற் பேராளராகவோ, பார்வையாளராகவோ பங்குபற்ற இருப்பவர்கள் 1989 ஜூலை 31 ஆம் நாளுக்கு முன் இந்து சமய, கலாசார தமிழ், விவகார இராஜாங்க அமைச்சுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

இவ்வாறு தொடர்பு கொள்ளுதல் எம் நாட்டு அறிஞர்கள் கலைஞர்கள் ஆகியோர் இம் மாநாட்டிற் பங்குபற்றுதலை ஒன்றிணைத்து ஒழுங்கமைக்கத் துணை புரியும்.

எஸ். சி. மாணிக்கவாசகர்
செயலாளர்
இந்துசமய, கலாசார, தமிழ் விவகார இராஜாங்க அமைச்சு.

244, காலி வீதி,
த. பெ. இல: 1700,
கொழும்பு - 04
27. 06. 1989.

# 6 ஆவது மாத நினைவஞ்சலி



அமரர் ச. சண்முகலிங்கம்
(ஆசிரியர் யா/ இந்துக்கல்லூரி, புங்குடுதீவு மகளிர் வித்தியாலயம்)

ஆண்டவன் படைப்பு: 09-05-1955 ஆண்டவன் அழைப்பு: 26-01-1989

திதி- 23-07 1989

கடமை புரிகையிலே காலன் வசப்பட்டு விட்ட எம் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்புத் தாய் சகோதரர், சகோதரி, அத்தான், அண்ணிமார்.

52, ஆடியபாதம் வீதி,
நல்லூர் மாக்கற்,
யாழ்ப்பாணம்.

(11595)

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 89 வகுப்புகள்

24 - 07 - 89 திங்கள் ஆரம்பமாகின்றன.

Day Class மாணவர்களுக்கு வழமையான நேர அட்டவணையின் படி வகுப்புகள் நடைபெறும்.

Week-end Class மாணவர்களுக்கு
- 24-07-89 திங்கள் 8.00 a.m. வகுப்பு ஆரம்பமாகும்.

| | |
|---|---|
| 8.00 — 9.00 | LOGIC |
| 9.00 — 10.00 | ACCOUNTS |
| 10.00 — 11.00 | ECONOMICS |
| 11.00 — 12.00 | COMMERCE |

[சி-3086]

## ஸ்டைரேபோம் உற்பத்திகளை (றிஜிபோம்)

## நாம் தயாரிக்கின்றோம்

- மீன் பிடிக்க உதவும்
  மிதப்புக் கட்டைகள், ஷீட்டுக்கள், மீன்கொண்டு செல்லும் பெட்டிகள், ஐஸ்கிறீம் கொள்கலன்கள், பைப், இன்சுலேஷன் மற்றும் பொதிகட்டும் பொருட்கள்
  மற்றும்

பொலிபிளெக்ஸ் உற்பத்திகளும் (ஆர்பிபோம்)
குஷன்கள், மெத்தைகள், ஷீட்டுக்கள், ஸ்பொன்ஜ்கள் மற்றும் மெத்தை போன்றவற்றைத் தயாரிக்க உதவும் பொருட்களுக்கும்

- கவர்ச்சிகரமான கழிவுகள் வழங்கப்படும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு முகவர்கள் தேவை.

தொடர்பு கொள்க:

**லங்கா பொலிமர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,**

49, கெய்சர் வீதி, கொழும்பு-11.
246, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
29/1, போதிராஜ மாவத்தை, கொழும்பு - 11.
(பிப்பிள்ஸ் பார்க் கப்பிளெக்ஸ்)
தொலைபேசி: 421954, 530455.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்
(கனகம்மா)

மண்ணில் வரவு: 21-02-1931 விண்ணில் விரைவு: 02-08-1988

திதி 23 07-1989

வருடம் ஒன்று மறைந்தாலும் உன் வாழ்வலைகள் மறையவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்..

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரன். பேத்தியர்.

ஸ்ரேசன் வீதி,
வைரவர் புளியங்குளம்,
வவுனியா

(1258)

# விடுதி வாய்ப்பு

பெண்கள் கிறிஸ்தவ மகளிர் சங்கம்

பாடசாலை மாணவியருக்கும், பணியாற்றும் மகளிருக்கும் 41, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் விடுதி வசதி உண்டு.

10-08-1989 தொடக்கம் விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**வை. டபிள்யூ. சி. ஏ. அலுவலகம்**
99, சப்பல் வீதி,
**யாழ்ப்பாணம்.**

(C/3080)

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. சதா. ஸ்ரீநிவாசன்
(D. R. O & Advocate)

தோற்றம்: 14. 09. 1918 மறைவு: 02. 08. 1988

திதி: 23. 07. 1989

சந்ததமும் நின் புகழைப் பேசி நின்
சரித்திரத்தைப் புரட்டி நிதம் பார்த்தோமையா!
சிந்தையிலே பிரியாத நின்றனன்பு
தேனெனவே இனிக்கிறதே நெஞ்சமெல்லாம்
சந்தையிலே உறவிதனைச் சாற்ற வென்றே
தரணிதனில் வந்தனையோ எந்தையையா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'திருத்தணிகை',
521/7, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(1159)

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



விஜயலட்சுமி மகேந்திரன் (விஜி)

தோற்றம்: 1946. 04. 18 மறைவு: 1988. 08.02

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ! அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையில் உங்களை இழந்தோம். மனம் துடித்தோம். அளவில்லாக் கண்ணீரை விழிதனிலே நிறைத்து விட்டு, அணையா ஜோதியென ஒளியேற்றிச் சென்றீரே!

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

கணவர்,
தாய். சகோதரங்கள்.

குருசுப்பிள்ளையார் குளம்,
வவுனியா.

(1246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலய உற்சவ சிறப்பு மலர்


புனித அன்னாள்
அருள் ஆசி வேண்டி
**வாழ்த்துகின்றோம்**

புனித அன்னாள் ஆலய உற்சவசத்தின் போது எமது அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு நல் வாழ்த்துக்கள்!

**குலம் சன்ஸ்**
69, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சந்தானமாதாவே நாட்டில் நிலவி வந்த கெடுதிகளில் இருந்து இதுவரை எமைக் காப்பாற்றியது போல் இனிமேலும் எம்மைக் காப்பாற்றும் தாயே!

வீ. எஸ். நவரட்ணம்
**ருவிங்கிளின் பேக்கறி**
பாண்டியன்தாழ்வு.

**திருச்செந்தூரன் றேடிங் கம்பனி**
315, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து அனுப்பப்படும்
வாழ்த்துச் செய்தி
**R. கணேஸ்**
இங்கிலாந்து.

**றூபன் ஸ்ரோர்ஸ்**
66, பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
(உரிமையாளர் K. திருநீலகண்டன்)

★ **ஐயர் கடை** ★
92, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**'சுமாட்' வீடியோ சென்ரர்**
56, பாண்டியன்தாழ்வு
தமிழ் ஆங்கில கசெட்டுக்கள் வாடகைக்கு விடப்படும்.

★ **டினேசன் ரேடர்ஸ்** ★
56, பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

★ **சம்பந்தர் பார்மஸி** ★
66, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.


## குடும்பவாழ்வின் குலக்கொழுந்தாய்
## துயர் நீக்கும் புனித அன்னாள்

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் பாண்டியன் தாழ்வில் ஆதிக்குடிகளாகக் கத்தோலிக்கர் இருக்கவில்லை. அந்தக்காலத்தில் பன்மொழிப் புலவராய் வரலாற்று ஆசிரியராய் சிந்தனையாளனாய், பண்டைய இலக்கிய ஆராய்ச்சிச் செம்மலாய் விளங்கிய சுவாமி ஞானப்பிரகாசர் தன் பாண்டித்தியத்தோடு மாத்திரம் நில்லாது; கிறிஸ்துவ ஒளியை அன்பின் அரசரின் இன்ப ஆட்சியைப் பாவ இருளில் பரிதவித்தவர்களைத் தூய வழிக்கு அழைத்துச் செல்ல ஆங்காங்கே ஆலயங்களை நிறுவி மறை அறிவையும் இறை நெறியையும் சுடர் விடச் செய்தார். அவ்வாறு அமைந்த ஆலயங்களில் ஒன்று தான் பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயம்.

அன்னம்மாள் சுவக்கீன் ஆகியோர் தேவதாயின் பெற்றோர் ஆவர். மலட்டுத் தன்மையில் இருந்த அன்னம்மாளுக்கு இறைவனின் விசேட கருணையால் தேவமாதா மகளாகப் பிறந்தாள். தேவமாதாவின் உற்பவத்தில் அவளை இறைவன் அன்னம்மாள் வயிற்றிலே பாவதோஷம் அணுகாமல் காப்பாற்றினான்.

இறைவனின் இந்தச் செயல் யேசுவின் மாசற்ற புனிதத் தன்மைக்கு ஓர் அத்திவாரமாய் இருந்தது. இதனால் அவள் இறைமகன் யேசுவின் பேத்தியானாள். தேவமாதாவிற்கு சிறிய வயதிற்தானே வேதாகமத்தையும் யூத மரபு வாழ்க்கையின் ஒழுக்க நெறிகளையும் அன்னமமாள் கற்றுக் கொடுத்தாள்.

தேவ தாய் தன்னைச் சிறு வயதில்இறைவனுக்கு அர்ப்பணிக்க தூண்டுகோலாக இருந்தவள். புனித அன்னம்மாளை ஆங்கிலத்தில் (St. ANNE)

மலர் அமைப்பு:
திரு. சி. ஆர். ஜோசப்
இராசையா ஸ்ரீதரன்
தி. றெபேட்

சென்ற் ஆன் என்று அழைப்பர். இப்பெயர் மருவி சந்தானாள் (சந்தானமாதா) என்று வழங்கலாயிற்று.

மகப் பேறு இல்லாத தம்பதியர்கள் இவளிடம் மகப்பேற்றுக்காக மன்றாடி பிள்ளைப்பாக்கியம் பெறுவதுண்டு. திருமணமாகும் யுவதிகளும், இளைஞர்களும் தமக்கெ பொருத்தமான துணையை நாடி இவளிடம் மன்றாடுவர். இவ்விரு பெருங் குணங்களால் சந்தான மாதா பெயர் பெற்றவளாக விளங்குகின்றாள்.

பாண்டியன் தாழ்வில் கோயில் கொண்டு பல பக்தர்களை தம்மிடம் அழைத்து குடும்ப வாழ்வின் குலக் கொழுந்தாய் நின்று அருள் பாலித்து வருகின்றாள். திருச்சபை இவள் திருநாளை ஆடி மாதம் 26 ஆம் நாள் எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. எனவே இந் திருநாளை பாண்டியன்தாழ்வு வாழ் மக்கள் தமது பெருவிழாவாக வருடந்தோறும் கோலாகலமாக கொண்டாடி வருகின்றார்கள்

### ஆலய தோற்றமும் பாண்டியன் தாழ்வு கத்தோலிக்கரும்

இவ் ஆலயம் சிறு கொட்டிலாகத் தற்போது சந்தான மாதா ஒழுங்கை என்று வழங்கப்படும் வீதியில் மிகவும் எளிமையான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. கத்தோலிக்க மறையைத் தழுவிக்கொண்டோரின் எண்ணிக்கை அதிகரிக்கவே 1908 ஆம் ஆண்டளவில் தற்போதைய ஆலயம் அமைந்த இடத்திற்கு மாற்றப்பட்டது.

ஆலயம் கொட்டில் நிலையில் தான் இருந்த[illegible] களால் பக்கங்கள் அமைக்கப்பட்டு ஓலையால் [illegible] தளம் மண்ணால் அமைந்திருந்தது சிறப்பு என்னவெனில் சனி நாட்கள் தோறும் பெண்கள் கூடித் தளத்தைச் சாணகம் கொண்டு மெழுகி ஆலய சுற்றுடலைப் பெருக்கிச் சுத்தம் செய்து மறுநாள் திருப்பலிக்கு தயார் ஆக்கினர்.

தற்போது வானளாவ கிளை பரப்பி இருக்கும் இலுப்பை மரத்தில் பொருத்தப்பட்டிருந்த ஆராய்ச்சி மணி மக்களை வழிபாட்டிற்கு அழைத்தது. பங்குக்குரவர் பல ஆலயங்களில் பணி புரிந்தமையால் ஞாயிறு தினங்களில் மட்டும், திருப்பலி அருட்திரு பீற்றர் அடிகளால் நிறைவேற்றப்பட்டது. பூசைக்காகிய கறுத்த உடுப்புடன் பலிக்காகிய பொருட்களைத் தாங்கிய பெட்டியுடன் கால்நடையாக அவர் வருவதை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

### மறைபணியும் சமூக சேவையும்

தற்போது குருமனை அமைந்துள்ள இடத்தில் அல்பிறேற் அடிகள் ஓர் தச்சுத்தொழிற்சாலையை அமைத்து இளைஞருக்கு தொழில்பயிற்சி அளிக்கச் செய்தார். பூசைப் பரிசாரகர்களைப் பயிற்றுவிக்கவும், நெறிப்படுத்தவும், புனித பேக்மன்ஸ் சபையை மேற்படி குரவர் நிறுவினார்.

இருமுறை பங்குத்தந்தையாகப் பணி ஆற்றிய அருட்திரு செல்வரட்ணம் அடிகள் சிறப்புப் பணிகள் பல ஆற்றியதுடன் சிறப்பாக மணிக்கூட்டுக்கோபுரமும் ஆலய முன் சுவரும் அமைக்கலானார்.

எமது பங்கிலே தான் நவீன முறையிலான பணித்தளங்கள் அமைக்கப்பட்டன. 1936 இல் யாழ் மறைமாவட்டத்தில் முதன்முதலாக மரியாயின் சேனையை அருட்திரு பீ. இராசநாயகம் அடிகளும் கிறிஸ்துவின் இளம் சிப்பந்திகள் (Youth workes of Christ) என்ற ஸ்தாபனத்தை அருட்திரு பி. ஈ. அல்பிறேட் அடிகள் 1963 இலும் புது வாழ்வு இயக்கத்தை அருட்திரு வாஸ் அடிகளும் ஆரம்பித்தனர். இவர் சிறப்புற பணியாற்றியமை இங்குகுறிப்பிடத்தக்கது.

ஆலயத்தில் பல புனர்நிர்மாண பணிகளைப் புரிந்த அருட்திரு பி. கொன்ஸ்ரன்ரைன் அடிகளையும் நாம் மறப்பதற்கில்லை. வளரும் கத்தோலிக்கரின் எண்ணிக்கையை மனத்தில் கொண்டு ஆலயத்தைப் பெரிதாக்கினார். புதிய வழிபாட்டு முறைக்கு அமையப் பலிபீடத்தை அமைத்து குருமனையிலும் பல திருத்த வேலைகளைச் செய்வித்தார். ஆலயத்தில் சுவர் மின் விசிறிகள் அமைத்து, ஒலிபெருக்கி வாத்தியக்கருவி (Organ) முதலியவற்றை ஏற்பாடு செய்து வழிபாட்டு முறைகள் சிறப்புற உதவினார்.

தற்போதைய பங்குத் தந்தையாக விளங்குபவர் திரு. மேரியோசவ் அடிகளாவார். கிறிஸ்தவ கண்ணோட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பது அவரின் இலட்சியம். இருந்தும் ஆலயம் ஆண்டவனுக்கு உகந்ததாகவும் இறை மக்களுக்கு வசதி ஆனதாகவும் அமைய வேண்டுமென பல ஆக்கபணிகளைச் செய்துள்ளார். பங்கு மக்கள் ஆலயத்துள் அடங்குதலில் சிரமம் ஏற்பட்டமையால் விசாலமான போட்டிக்கோ அமைத்துள்ளார். எமது ஆலய வளவில் ஒரு பங்கு மண்டபம் இல்லாமையால் சமய சமூகப் பணிகளுக்கு இடைஞ்சலாக இருப்பதை உணர்ந்து ஒரு மண்டபத்தை அமைத்து, அதை மறைபணிகளுடன் ஓர் பாலர் பாடசாலையாகவும் நிறுவி உள்ளார். ஆலய பிரதான வாயிலில் இருந்த பழுதடைந்த கதவை அகற்றி இரும்பு கதவு இட்டு நவீன மயமாக்கி உள்ளார். தற்போது ஆலய வளவைச் சுற்றி மதில் சுவர் அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார்.

### பங்குத்தந்தையும் பக்திச் சபைகளும்

தற்போதைய பங்குத் தந்தையின் வருகையின் பின் மரியாயின் சேனை புனித வின்சென்டி போல் சபை ஆகிய பக்தி சபைகளை நிறுவி அவை சிறப்புற இயங்க ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகின்றனர். ஆலயச் சூழலில் அகவளர் புறவளர் விருட்சங்களை விருத்தி செய்வது இவரின் பொழுது போக்காகும். இவை

(5 ஆம் பக்கம் பார்க்க)



புனித அன்னாள் திருச் சுரூபம்

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கடிதில் போக்கி, அருள் புரிந்து - அல்லல் அகற்றி -
துன்பம் விலக்கி - இன்னல் நீக்கி - இருள் போக்கி -
இன்னருள் புரிந்திடும் மாதாவான பாண்டியன்தாழ்வு
புனித அன்னாளே!

### ஆசியுரை

புனித அன்னாளின் நன்னாள் ஆகிய இன்று எம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் கிறிஸ்துவின் சமாதானமும் அவரின் பராமரிப்பும் உண்டாகி பங்கு மக்கள் கிறிஸ்தவ மதிப்பீடுகளில் நிலை கொண்டு கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக விளங்கி அல்லல் அகன்று, தொல்லை தீர்ந்து, இன்னல் இல்லா வாழ்க்கை அடைய இப்புனித நன்னாளில் ஆசீர் வழங்குகின்றோம்.

பங்குத் தந்தை
அருட்திரு
இ. மேரி யோசவ்
அடிகளார்


புனித அன்னாள்
அருள் ஆசி வேண்டி
**வாழ்த்துகின்றோம்**

புனித அன்னாளின் நன்னாளில் ஒற்றுமையும் சமாதானமும் எம் மத்தியில் நிலவ அருள் வேண்டுகின்றோம்.

**மொறிஸ் மோல்டஸ்**
70/5, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

புனித அன்னாள் உற்சவத்தில் எமது அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்

பாண்டியன்தாழ்வு
**பேக் ஹவுஸ்**
65, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

★
**கமலா ஸ்ரோர்ஸ்**
137, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

**ஜெயா ஹரன் தச்சுத் தொழிற்சாலை**
363, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

**கபில் வைண்டிங் வேக்ஸ்**
17, 19, ஆஸ்பத்திரி பஜார்,
யாழ்ப்பாணம்.
(உரிமையாளர் ஜெயரட்ணம்)

**தாசன் ஹாட்வெயர்**
225, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**கஜேந்திரா ஸ்ரோர்ஸ்**
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
(உரிமையாளர்: பாலசிங்கம்)

★ **யுனைற் சேவிஸ்** ★
165, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

★ **டினஸ்டி எம் காமன்ஸ்** ★
70, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கணக்கியல் A/L

கம்பனி முடிவுக் கணக்குகளும் பகுப்பாய்வும்

★ கம்பனி முடிவுக் கணக்குகள் பிரசுரத் தேவை, இயக்குனர் தேவை
★ நிதி வளங்கள் உபயோகங்கள் பற்றிய கூற்றுக்கள்.
★ கணக்கீட்டு விகிதங்கள்.

ஆக்கம்: க. தங்கராஜா
B. Sc. (P. F. T) S P.
D I P. in Ed.

கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
தினேஸ் புத்தகசாலை.

(1252)

## TOEFL CLASSES

Those who wish to follow TOEFL classes are requested to register their names at this Institute. Classes will be conducted (during weekends since Saturday, 29th July by Dr. Porter.

— DIRECTOR

Evelyn Rutnam Institute,
University Lane,
Thirunelveli, Jaffna.

(11594)

## வைரமுத்து அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

அமரர் நடிகமணி வி. வி. வைரமுத்துவின் அஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இன்று காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும் இக்கூட்டத்துக்கு திரு. வி. கே. சண்முகராசா தலைமை வகிப்பார்.

(க-10)

## இசை அரங்கேற்றம்

இசைக் கலைமணி திருமதி வாசஸ்பதி ரவீந்திரனின் இசை அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் வி. சிவசாமி தலைமை வகிக்கும் இசை அரங்கேற்றத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவார். (க)

## நெல்லியடியில் கிரனேட் வீச்சு

நெல்லியடியில் நேற்று முன்தினம் கிரனேட்டுகள் வெடிக்கும் சத்தங்கள் கேட்டன. எனினும் பாரதூரமான அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

இதேவேளை அதற்கு முன்தினமும் நெல்லியடி— கொடிகாமம் வீதியிலும் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. (ஓ-70)

## ஓராண்டு நினைவுக் கூட்டம்

யாழ்- பல்கலைக்கழக கலைப் பீடமாணவன் ரி. விமலேஸ்வரனின் ஓராண்டு நினைவுநாள் கூட்டம் கடந்தவியாழன் காலை பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கலைப் பீடாதிபதி பேராசிரியர் என், பாலகிருஷ்ணன், விரிவுரையாளர் ஜெ ளி இராசரத்தினம், கலைப்பீட மாணவர் அமைப்புத் தலைவர் டொன் பொஸ்கோ, விஞ்ஞான பீடத் தலைவர் குலேந்திரன், மாணவர் அமைப்புத் தலைவர் சிவஞானம்ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்கள்.

(இ- 3)

## வாகனங்கள் விற்பனைக்கு உண்டு

மன்னார் டிலாசால் இல்லத்தில் ஒரு உழவு இயந்திரமும், ஸ்கூட்டர் ஒன்றும், கயஸ் வேன் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. இவை மூன்றும் தற்போது பாவனையில் உள்ளது.

உழவு இயந்திரம் இலக்கம் — 25 ஸ்ரீ 7420
கயஸ் வேன் இலக்கம் — 38 ஸ்ரீ 3192
சி—70 ஸ்கூட்டர் இலக்கம் — 85 ஸ்ரீ 6667

இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் கீழ்க்காணும் முகவரியுடன் ஆவணி 30 இற்குள் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குனர்,
டிலாசால் இல்லம்,
மன்னார்.

(11595) தொலைபேசி இலக்கம்: 023-2316

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி லூட்ஸ் தேவதாஸ்
(சரோ)

மலர்வு:- 07 - 07 -1940
உதிர்வு:- 23 - 07 - 1985

அம்மா லூட்ஸ் மாகிறேற் ரோஸ்மலையே!
ஆண்டின்று நான்கேதான்: கடந்தபோதும்
சும்மாநாம் சொல்வதில்லை சுகமேயில்லை;
...சூரைத்துக் காற்றைபோல் வாழ்க்கையிங்கு;
விம்மாத நாளில்லை: விடிவுமில்லை;
வீடென்று சொல்வதுதான் விளக்கேயில்லை;
பெம்மானை வேண்டுகிறோம் நீயும்வாழ்ந்து
பெற்றபிள்ளை தலைவனையும் வாழவைப்பாய்!

கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்.

466/2 B, அர்ச்யுவானியார் ஒழுங்கை
யாழ்ப்பாணம். (1226)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. சின்னத்தம்பி கதிர்காமர்

பாருக்கு நிழலாய்: 16, 02. 1920
பரமன் நிழலிற்கு: 23. 06. 1989


பழுத்த மரமாய் பாரினில் வாழ்ந்து
கொழுத்த உன் சேவையால் கோயிலாகிப் போனாய்.
கந்த சஷ்டி கவசமும், விநாயகர் பாட்டும்
நித்தமும் நீ பாடக் கேட்டு முத்தி தந்தவன்
உன் முதல்வன்.
ஆலமரமாய் ஊருக்கு நிழல் தந்தாய்
அவன் ப தந்தான் உனக்கு நிழலென்று
இளைப்பாறச் சென்றாய்

23-07-1989 ஞாயிறு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு உறவினர் நண்பர்களை அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (1255)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. முத்தையா இராசையா
(காரைநகர் புதுரோட்)


தோற்றம்: 04 - 06 - 1906
மறைவு: 23 - 07 . 1988

எங்களை அன்போடும் பாசத்தோடும் வளர்த்து வேண்டிய நேரத்தில் வேண்டிய யாவும் உகந்தளித்த அன்புத் தெய்வமே! குடும்ப விளக்கே!! உங்களைப் பிரிந்து ஓராண்டு கழியினும் எங்கள் துயரத்தை ஆற்ற முடியாமல் தவிக்கின்றோமே!!! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
...க்கள், மருமக்கள், பேரப்பிள்ளைக .

(1219)

## மாற்றுப் பாகங்கள் கிடைக்கும்



முன் கையிருப்புக்கள்.
ஜெமானியன்
ஆர் 12 க்குரியது

சமநிலை ரோட் உருளை

இறக்குமதி, விநியோக அடிப்படையில் கிடைக்கும்.

★ 12 தொன் கொள்ளளவு கொண்ட ஹைட்ரோலிக் ஸ்டியரிங், விரும்பின் புல்டோஸர், அலகு மாட்டியும், சுவடுபடுத்தியும், டிரக்டரினால் இழுக்கக் கூடிய அதிர்வு உருளையும் கிடைக்கும்,
★ தானே இயங்கக்கூடிய, டயர்களில் செல்லும் ரோட் உருளைகள்
★ இலங்கையில் இன்று 310க்கு மேல் பாவனையில் உள்ளன.
★ அறிமுக விலைகளில் கிடைக்கும்

60 - 90 நாட்களில் விநியோகிக்கப்படும். (இறக்குமதி விநியோக அடிப்படையில் மட்டுமே)

இலங்கையில் பிரதான ஏஜென்ஸ்
ப்ரீ லங்கா ட்ரேடிங் கம்பனி லிமிற்.
409, காலி வீதி, கொழும்பு-3.
தொலைபேசி: 575241-4 ரெலெக்ஸ் 21147 பக்ஸ் 575444

விற்பனை நிலையங்கள்
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

உதிரிப்பாகப் பகுதியும்
168, நீர் கொழும்பு வீதி, பேலியகொடை,
தொலைபேசி: 531595 530870.

## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



து. பஞ்சலிங்கம்
(மனோமாஸ்டர்)

மலர்வு: 09 - 04 - 1956
உதிர்வு: 22 - 07 - 1984

பேரினவாத இருட்டில்
தோள்வலிமை விஞ்சிய
எம்மின அரசியல் சூழல்
விடியலின் தலை கொய்து
கோயிலிட்டு
சாவின் தீபம்காட்டி
சல்லா பிக்க-
சிந்தை இழந்த மக்கள்
விடியலைப் பலிகொடுத்து
விழிக்காது
தூங்கும்போது...
தோழனே!
உன் ஆத்மாவின்
இராகத்துடன்
இசைந்து பாடி
மேல்வானில் ஒரு
விடுதலைப்பறவை
ஆவேசமாக வருகிறது;
அது
"மானுடம் வெல்லும்"
எனப் பாடி வருகிறது.

நண்பர்கள், உறவினர்கள்,
ஊர்மக்கள்;
வல்வெட்டித்துறை.

(11601)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி தங்கமணி தங்கராசா

மலர்வு: 15- 03- 1936
உதிர்வு: 23- 06- 1989

அன்புத் தெய்வமே அம்மா!

எமக்கு வழிகாட்டி, எளிமை எழிலூட்டி உலகில் எமை ஆளாக்கிய உத்தமியே! எம்மைக் காத்திடுவாய் எனக் காத்திருந்தோம்! உன் புன்சிரிப்பும் பேச்சும் இல்லாமல் நாம் தவிக்கின்றோம் அம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;

மகன்மார், மகள்மார், மருமகன்மார், மருமகள்மார், பேரன்மார், பேத்திமார், பெறாமக்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

திருவில் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (1232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

பொருள்:

பண்பு உடையவராக வாழும் நல்வழியை, யாரிடத்திலும் எளிய செவ்வியுடன் இருப்பதால் அடைவது எளியது என்று கூறுவர்.

உதயன்

இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 4805
யாழ்ப்பாணம். 22073
23 07 1989 த. பெ. இல. 23

## தாமதம் இனியும் வேண்டாம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்விப் பிரிவு ஒன்றை விரைவில் நிறுவ ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அந்தப் பிரிவில் தொழிலாளர்கள், பொதுமக்கள் பகுதி நேர அடிப்படையில் கல்வி கற்றுப் பட்டம் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா வெளியிட்டிருக்கிறார். பல்கலைக்கழகத்தில் நூலகவியல் துறை ஒன்றை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

அவை இரண்டும் காகிதத்தில் எழுதப்பட்ட வெறும் திட்டங்களாக இல்லாமல், மிக விரைவில் செயல் வடிவம் பெற வேண்டும். அதுவே பிரதானம்.

பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சையில் சித்தி அடைந்து முழு நேர மாணவராக அங்கு பயின்றால் மட்டுமே ஒருவர் பட்டதாரி ஆகும் வாய்ப்பு உண்டு என்ற நிலைப்பாடு இப்போது உலக நாடுகளில் இல்லை. பகுதி நேரமாகப் பயின்றும் பட்டதாரிகள் ஆகும் வசதி மிகவும் தாராளமாக்கப்பட்டு உள்ளது.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பல்கலைக்கழகம் புகமுடியாதவர்கள், அந்தந்தத் துறையில் ஆர்வம் உள்ள தொழிலாளர்கள், தொழில்நுட்பத் துறைகளில் வெறும் பயிற்சி சார்ந்த அனுபவம் உள்ளவர்கள் ஆகியோரும் பட்டதாரிகளாகும் வாய்ப்புப் பரவலாக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக, வெளிநாடுகளில் கல்வி அறிவும், தொழில் அறிவும் தொழில் நுட்ப அறிவும் எவருக்கும் எட்டக் கூடியனவாக உள்ளன. பொதுமக்களும் பட்டதாரிகள் ஆகும் வாய்ப்புகள் விரவியுள்ளன. அதன் விளைவாக அந்தந்த நாடுகளின் கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

இந்த வசதிகள் வாய்ப்புகள் இலங்கையில் மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றன. தமிழ்ப் பகுதிகளில் அந்த மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் தானும் இல்லை எனலாம். மொத்தத்தில் இவ் விடயத்தில் தமிழ்ப் பகுதிகள் மிகவும் பின்தள்ளப்பட்டுள்ளன.

இந்த வசதிக் குறைவு உடனடியாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பல்கலைக்கழகங்களில், வெளிவாரி, பகுதி நேரம் கல்வி வசதிகள் தாமதம் இன்றிச் செய்து தரப்பட வேண்டும்.

சாதாரண கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள்போல பல்கலைக்கழகங்களும் வெறும் மாணவர்களின் கல்விக் கூடங்களாக மட்டும் இருந்துவிடக்கூடாது. சமுதாயத்தின் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்துக்கும் அவற்றின் பங்களிப்பும், சேவையும் மிகமிக அவசியம்.

ஒரு போதும் இல்லாமற் போவதைவிட, மிகப் பிந்தியாவது ஒரு காரியம் நடப்பது பரவாயில்லை என்பது ஒரு நம்பிக்கை. அந்த வகையில், தமிழ்ப் பகுதிகளில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களிலும் பகுதி நேர, வெளிவாரி பட்டப்படிப்பு வசதிகள் இனியும் தாமதமின்றிச் செய்யப்பட வேண்டியவை. அதனையே சம்பந்தப்பட்ட சகலரிடமும் வலியுறுத்த விழைகின்றோம்.

## அரபாத்தைக் கொல்வது பிரச்சினையைத் தீர்க்காது!

### அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 22

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தைக் கொல்வதன்மூலம் மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

அமெரிக்கா முன்கண்டவாறு நேற்று அறிவித்தது.

இஸ்ரவேல் வர்த்தக அமைச்சர் ஷரோன் நேற்று முன்தினம், 'அரபாத்தைக் கொல்வதன் மூலமே மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்' —என்று அறிவித்து இருந்தார்.

இது தொடர்பாகவே அமெரிக்க ராஜாங்க அமைச்சு இக் கருத்தை வெளியிட்டது.

## செவ்வாயில் உயிரினம்; விஞ்ஞானிகள் புதிய நம்பிக்கை

லண்டன், ஜூலை 22

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் உண்டு என்ற நம்பிக்கையை, அன்டார்க்டிக் பனிப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிறிய எரிகல் (Meteorite) விஞ்ஞானிகள் மத்தியில் மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'நேச்சர்' சஞ்சிகையின் கடந்த வியாழன் இதழில் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் இந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர்.

அன்டார்க்டிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த எரிகல், பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய்க் கிரகத்தில் எரிமலை வெடித்தபோது வீசப்பட்ட ஒன்று என்று ''நேச்சர்'' சஞ்சிகை தெரிவித்தது.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் இருக்கிறது என்பதை அந்த எரிகல்லில் காணப்பட்ட கார்பன், ஹைட்ரஜன் அடையாளங்கள் நிரூபிக்கின்றன என்றும் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்தனர். (உ-எ)

## 13 ஆவது திருத்தத்தினால் தமிழர் பிரச்சினை தீரவில்லை

### நட்வர்சிங் இப்போது கூறுகிறார்

இலங்கை அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தம் தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றுவதாக இல்லை என்றும் இந்தியா இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளது:

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் கே. நட்வர்சிங் லோகசபையில் பேசுகையில் இப்படிக் கூறினார்.

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர் முக்கியமானதாகக் கருதும் விஷயங்கள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இன்னும் திருப்திகரமானதாக அமுல் நடத்தப்படவில்லை.

ஒப்பந்தத்தை விரைவாக அமுல்நடத்தும்படி இந்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்தி வருகிறது. (உ-எ)

## தி.மு.க. அரசு கலைக்கப்படுமா? கோபாலசாமி பதில்!

அருப்புக்கோட்டை, ஜூலை 22

மாநில உரிமைகளுக்காக முரசு கொட்டுகிற இயக்கம் இந்தியாவிலேயே தி. மு. க. மட்டும் தான்.

தி. மு. க. எம். பி. வை கோபால்சாமி அருப்புக் கோட்டையில் நடந்த கலைஞர் பிறந்த தின விழாவில் பேசுகையில் முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

தி. மு. க. ஆட்சி நிலைக்குமா? என்று எவனோ ஒரு பைத்தியக்காரன் கூறியதாகத் தெரிகிறது.

இந்த ஆட்சியைக் கலைப்பதற்கு எவனுக்கும் சக்தி இடையாது. கலைக்கிற அதிகாரத்தை வைத்திருக்கிற ராஜீவின் ஆட்சி இன்னும் எத்தனை நாட்கள் நீடிக்கும் என்பது தெரியவில்லை.

தி. மு. க. வுக்கு சோதனை என்பது கடந்த காலம்.

இப்படி திரு. கோபால்சாமி சொன்னார். (எ)

## ★ இந்திய நாடாளுமன்றத் தேர்தல்: பொதுத்தேர்தல் சுவரொட்டி தேசியமுன்னணி தீர்மானம்!

ஹைதராபாத், ஜூலை 22

பொதுச்சின்னத்தில் போட்டியிடுவது என்ற எண்ணத்தைத் தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் முதிர்க்கட்சிகள் கைவிட்டுவிட்டன.

தேசிய முன்னணியில் ஜனதா தள், தெலுங்கு தேசம் கட்சி, காங்கிரஸ் எஸ் அஸாம் கணபரிஷத் தி. மு. க. ஆகியன அங்கம் வகிக்கின்றன.

வருகிற பொதுத் தேர்தலில் பொதுச்சின்னம் ஒன்றின் கீழ் சகல கட்சிகளும் போட்டியிட வேண்டும் என்று முன்னர் ஒரு கருத்து நிலவியது.

தி. மு. க. இதனை ஏற்கவில்லை. அதைத் தொடர்ந்து, தி. மு. க. வின் தேர்தல் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் சகல கட்சிகளும் போட்டியிடுவது என்று இணக்கம் காணப்பட்டது.

பின்னர் ஜனதா தள் அஸாம் கணபரிஷத், தெலுங்கு தேசம், காங்கிரஸ்– ஆகியன இந்த நிலையில் இருந்து பின் வாங்கின.

இப்போது தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் தங்கள் சொந்தத் தேர்தல் சின்னங்களில் போட்டியிடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் பொதுத்தேர்தலை ஒட்டி பொதுவான சுவரொட்டி ஒன்றைத் தயாரிப்பதில் தேசிய முன்னணி தற்சமயம் ஈடுபட்டுள்ளது. (எ)

## தொழிலாளர் கோரிக்கைகளுக்கு மண்டியிடும் நிலையில் சோவியத் அரசு

மொஸ்கோ, ஜூலை 22

சோவியத் அரசாங்கம் வேலை நிறுத்தம் செய்த சுரங்கத் தொழிலாளர்களுக்குப் பல சலுகைகளை வழங்கி வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்துள்ளது.

இதனால் மேற்கு சைபீரியாவின் குஷ்பாஷ் போன்ற சில பிரதேசங்களில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுள்ளார்கள். வேறுசில பிரதேசங்களில் தொடர்ந்து வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது.

குஷ்பாஷ் பிரதேசத் தொழிலாளர்களுக்கு கூடுதலான போனஸ், கூடுதலான உணவுப்பொருட்கள் — பாவனைப் பொருட்கள் உள்ளூர் சுயாட்சியை அதிகரிக்கும் நடவடிக்கைகள் ஆகியன உட்பட அவர்களின் பல கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது. (க)

## போலந்து வத்திக்கான் ராஜிய உறவு

வத்திக்கான், ஜூலை 22

போலந்து நாட்டுடன் வத்திக்கான் மீண்டும் ராஜதந்திர உறவை ஏற்படுத்தி உள்ளது:

1945 இல் கம்யூனிஸ்ட் ஆட்சி போலந்தில் ஏற்பட்டது, அதைத் தொடர்ந்து வத்திக்கான் ராஜதந்திர உறவை முறித்துக்கொண்டது.

தற்போதைய பாப்பரசர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## காமராஜர் விழாவில் கருணாநிதி

சென்னை, ஜூலை 22

சாமான்யனாக வாழ்க்கையைத் தொடங்கி சரித்திர நாயகனாக உயர்ந்தவர் காமராஜர். அதனால் அவர்மீது எனக்கு பெருமதிப்பு உண்டு.

இப்படி தமிழக முதலமைச்சர் கருணாநிதி காமராஜரின் 87 ஆவது பிறந்த நாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்திய தேசியவாதிகள் இயக்கம் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் இவ் விழா நடந்தது. (எ)

## பெப். தேர்தலில் தோற்றால் நாம் பதவி விலகத் தயார்

### நிக்கராகுவா தலைவர் கூறினார்

''அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நடைபெறும் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டால் தாம் பதவியிறங்கத் தயார்'' என்று நிக்காரகுவாவின் ஆளும் கட்சியான சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் ஒருவர் 20 ஆம் திகதி கூறினார்.

ஆனால் சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி வெற்றி பெறும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

''விவசாயிகள் தமது நிலத்தை இழக்க விரும்பமாட்டார்கள், தொழிலாளர்கள் மீண்டும் வர்த்தக நுகத்தடியின் கீழ்வர விரும்பமாட்டார்கள்'' எனவும் அவர் கூறினார் (க)

## வெள்ளை முதலாளியின் நாய்களை தாக்க முடியாத கறுப்பு தொழிலாளி

ஜோஹன்னேஸ்பேர்க், ஜூலை 22

தென் ஆபிரிக்க கறுப்பு இனத் தொழிலாளி ஒருவர் தன்னைத் தாக்கிய தனது முதலாளியின் நாய்களை எதிர்த்து நிற்க முடியாத இக்கட்டான நிலையில் இருந்தார். அத்தொழிலாளியை நாய்கள் இஷ்டம் போல் கடித்தன. அவர் பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வெள்ளை இன முதலாளியான வோர்ஸ்டர் என்பவர் தன்னிடம் வேலை பார்க்கும் கறுப்பு இனத்தவர்களின் கட்டளைக்குப் பணியாதவாறு தன் நாய்களைப் பழக்கி வைத்திருக்கிறார். அத்துடன் இந்நாய்களைத் தாக்கினால் தொழிலாளர் முதலாளியின் துன்புறுத்தலுக்கும் ஆளாவார்கள்.

நாயிடம் கடியுண்டவருக்கு மருந்துச் செலவுக்காக 4 டாலர்களையும் வீடு செல்வதற்காக வாகன வசதியையும் மட்டுமே முதலாளி வழங்கினார்,

இதே முதலாளிக்கு கடந்த ஆண்டு கறுப்பு இனத்தவர் ஒருவரைக் கொலை செய்ததற்காக ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் அபராதமும் மாத்திரமே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

## மோட்ச சிரார்த்த சங்காபிஷேகம்

கண்டுக்குளி ஜூலை 23

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய மோட்ச சிரார்த்த சங்காபிஷேகம் ஆடி அமாவாசை தினமான ஆகஸ்ட் முதலாம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்.

இதில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (த)

## நயினையில் ஆடிப்பூர திருவிழா

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் இலட்ச நாம அர்ச்சனை, ஸ்ரீ சக்கரயந்திர பூஜை, ஆடிப்பூரத் திருவிழா என்பன எதிர்வரும் 26 ஆம் திகதிமுதல் ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறும். (த)

## வருடாந்த மகோற்சவம்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய ஸ்ரீநலைநாயகி அம்பாள் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஆகஸ்ட் 3 ஆம் திகதி இரதோற்சவமும் 4 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (த)

## துர்க்கை அம்மன் கொடியேற்றம்

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான கொடியேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

தேர்த்திருவிழா 31 ஆம் திகதி திங்கட்கிழமை 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ச)

## யாழ். சங்கீத ஆசிரியர்களின் இடமாற்றப் பட்டியல் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் மாவட்ட சங்கீத ஆசிரியர்களின் இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது.

01-08-1989 முதல் இந்த இடமாற்றத்தின்படி இவர்கள் பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்று அவ்வப் பாடசாலை அமைந்துள்ள கோட்டத்தின் கோட்டக்கல்வி அதிகாரிக்கும், கணக்காளருக்கும் தனித்தனியே அறிவிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

இடமாற்றம்பெற்ற ஆசிரியர்களின் பெயரும் அவர்கள் தற்போது கடமைபுரியும் பாடசாலையும் புதிதாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பாடசாலையின் பெயரும் வரிசைக்கிரமமாக கீழே தரப்படுகிறது:-

திருமதி ரீ அன்னலட்சுமி, யாழ் வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வி. — யாழ்திருக்குடும்ப கன்னியர்மடம், செல்வி எஸ். கணபதிப்பிள்ளை புங்குடுதீவு ம. வி.— யாழ் பெரியபுலம் ம. வி, செல்வி ஈ. வேதாரணியம் நயினாதீவு ம.வி — மல்லாகம் ம. வி,

திருமதி என். செல்வராஜா நயினாதீவு ஸ்ரீ கணேச வி— பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, செல்வி ரீ. தவபாக்கிய நாதன், கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி (3 நாட்கள், ஊர்காவற்றுறை புனித மரியாள் வி. (2 நாட்கள்) - மூளாய் சைவப்பிரகாச வி.

திரு. வீ. உருத்திரன், மூளாய் சைவப்பிரகாச ம. வி. (3 நாட்கள்), வட்டு திருநாவுக்கரசு வி. (2 நாட்கள்) — சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (3 நாட்கள்), பொன்னாலை வரதராஜப் பெருமாள் வி. (2 நாட்கள்), திருமதி ரீ. இராமச்சந்திரன், மல்லாகம் ம. வி. — அருணோதயாக் கல்லூரி (3 நாட்கள்) அளவெட்டி சதானந்த வி. (2 நாட்கள்)

திருமதி கே. சிவதாசன் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி — தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, திரு. எஸ். கலிபுகவரதன் அராலி இந்துக்கல்லூரி — வட்டு திருநாவுக்கரசு ம. வி (3 நாட்கள்), பிளவத்தை அ. மி. த. க. பா (2 நாட்கள்)

திருமதி ரீ. பொன்னம்பலம், அராலி சரஸ்வதி ம. வி. — அராலி இந்துக்கல்லூரி, திரு வீ. பரமலிங்கம் மாதகல் புனித சூசையப்பர் ம. வி. — காங்கேசன்துறை ம. வி திரு வீ சுந்தரலிங்கம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி — யாழ். புனித சாள்ஸ் ம. வி

திருமதி. ஜனதா பராபரன் செம்பியன்பற்று அ. த. க. பா — யாழ் வேலாயுதம் மக வி.) திருமதி எம். கந்தசாமி கச்சாய் அ. த. க. பா. (3 நாட்கள்) எழுதுமட்டுவாள் கணேச வி (2நாட்கள்)- கச்சாய் அ. த. க. பா, திரு. எஸ். பத்மநாதன் இணுவில் சைவ மகாஜன ம. வி. — யாழ். இந்துக் கல்லூரி.

திருமதி வி. ஜே பீ. மூர்த்தி மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை (3 நாட்கள்), கந்தரோடை தமிழ்க் கந்தையா. வி (2 நாட்கள்)— மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை.

திரு. எஸ். சிவஞானராசா, சுன்னாகம் மயிலணி சைவ வி. (3 நாட்கள்) உடுவில் மான்ஸ் ம. வி. (2 நாட்கள்)- சுன்னாகம் ஸ்கந்தவரோதையாக்கல்லூரி. திருமதி எஸ். சோமசுந்தரம் சுன்னாகம் ஸ்கந்தவரோதையாக் கல்லூரி— குப்பிளான் விக்னேஸ்வர ம. வி.

திருமதி எஸ். வேதீஸ்வரன் - தாவடி இ. த. க. பா (3 நாட்கள்) சுதுமலை சிந்மய பாரதி வி (2 நாட்கள்) — தாவடி இ. த. க பா, திருமதி. கே. கணேசலிங்கம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வி (3 நாட்கள்) மானிப்பாய் புனித ஆன்ஸ் றோ. க. பா (2 நாட்கள்) — ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வி.

திருமதி. எஸ். அருளானந்தம் ஆவரங்கால் நடராஜ ராமலிங்க. வி, ஆவரங்கால் மகாஜன வி — ஆவரங்கால் மகாஜன வி, அச்சுவேலி சரஸ்வதி வி, திருமதி எஸ் நித்தியானந்தன் உடுத்துறை ம. வி — யாழ். புனித மரியாள் ஓ. எல். ஆர் செல்வி. என். எம். வர்ணலாதேவி நெடுந்தீவு ம. வி, நெடுந்தீவு றோ. க. அ. பா — நல்லூர் ஸ்தான சி. சி. த. க. (த - 3)

## அதிபர் உப-அதிபர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 23

வேலணை கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள அதிபர்கள், உப அதிபர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கும், பயிற்சி முகாமும் எதிர்வரும் 27, 28 ஆகிய திகதிகளில் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (க-6)

## பயிற்சி முடிந்து டாக்டர் நாடுதிரும்பினார்

யாழ்ப்பாணம் ஜூலை 23

புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் அண்மையில் இங்கிலாந்து சென்றிருந்த டாக்டர் சிவபாலசுந்தரம் இருதய நோய் சம்பந்தமான தனது பயிற்சியை முடித்துக் கொண்டு நாடு திரும்பினார்:

இவர் இருதய நோய் சம்பந்தமான பல கருத்தரங்குகளிலும் அங்கு கலந்துகொண்டார். (இ 126)

## லைசன்ஸ் பெறாத வர்த்தகர்கள் மீது சட்டநடவடிக்கை

மட்டக்களப்பு ஜூலை 23

மட்டக்களப்பு மாநகரசபை வியாபார லைசென்ஸ் பெறாத நகர வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டுளளது.

இந்நடவடிக்கையின் பிரகாரம் சுமார் 200 வர்த்தகர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த-21)

## குடுபப...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பங்குக் குருவரின் அரும் பணிகளில் சிலவாகும்.

இவ்வாறு புனித அன்னாளின் ஆலயத்தின் சிறப்புக்காகவும் இறைமக்களின் ஆன்ம உடல் நலன்களுக்காகவும் எம் ஊரின் நடுநாயகமாக விளங்கும் கோவிலின் அழகுத் தோற்றத்திற்காகவும் ஆர்வமாக உழைத்த பங்குத்தந்தையர் அனைவருக்கும் நன்றி நவிலும் இந்நேரத்தில் எம்மைப் பிரிந்து மரணத்திரையில் மறைந்த எம் குருக்களுக்கு புனித அன்னாள் வழியாக இன்ப சாந்தயை இறைஞ்சுகின்றோம்

பங்கு மக்களின் தணியாத ஆன்ம தாகமே எமது செயற்பாட்டிற்கு ஊற்றாக உள்ளது. அவர்கள் அனைவருக்கும் நன்றி உரித்தாகுக.

புனித அன்னாளின் ஆசியை அனைவருக்கும் விரும்புகிறோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your Friends in Finance
**SHABRA**
61, New Bullers Road,
Colombo - 6.

# உதயன்

23 07 · 1989 ஞாயிற்றுக்கிழமை

நிதித்துறையில்
நாணயம்மிக்க நண்பன்
"ஷப்ரு"
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## விக்னு
## டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

89 ஆம் ஆண்டுக்கான
வகுப்புக்கள் யாவும்
24.07-89 வழமைபோல்
நடைபெறும்.

— நிர்வாகி

[சி-2977]

## நாஷனல்
## சிப்பிங் அன்ட் ரவல்ஸ்

பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்

★ ஜேர்மனி ★ இத்தாலி
★ பிரான்ஸ் ★ சுவிஸ்

ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு
வாரம் ஒரு பயண ஏற்பாடு

விபரங்களுக்கு:

**NATIONAL SHIPPING AND TRAVEL**

New Lalitha Building,
185/2, Kasthuriar Road,
**JAFFNA.**

(C/2965)

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

இத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்படும் அவசரத் திருத்தங்களுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. | முள்ளிக்குளத் திட்டம் | ரூ. 100,000/- |
| 2. | முகத்தான்குள திட்ட வீதி | ரூ. 30,000/- |

23 - 08 - 89 காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை 21 - 07 - 89 தொடக்கம் 21 - 08 - 89 வரை வேலைநாட்களில் பாவற்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி க. சிவசுப்பிரமணியம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
பாவற்குளம் பிரிவு,
வவுனியா.

17. 07. 1989. (சி/3083)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி கலாபரன்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், பரந்தன், முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி குமாரசாமி, புவனேஸ்வரியின் அன்பு மகன் கலாபரன் நோர்வேயில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி காமாச்சியினதும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், ஆச்சிமுத்துவின் பேரனும், சமலராணி, கலைவாணி, சலாநிதி, குணாகரன், சிவகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கரலிங்கத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி ப. பத்மநாதன்.

பரந்தன். (1267)

### அரபிக்கடலில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் மாற்றம் செய்து பயன்படுத்தி வருகிறது.

ஒரு நாசகாரி உட்பட வேறு மூன்று கப்பல்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

'விரட்' விமானந்தாங்கிக் கப்பலில் ஹரியர் ஜெட் விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் உள்ளன.

(உ-எ)

### அடுத்து வரும்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கை பலனளிக்கப் போவது இல்லை. இப்போது பத்திரிகைத் தணிக்கை பற்றி அரசு மீளாய்வு செய்து வருகிறது.

முதல் தடவையாக உலகம் இப்போதுதான் எம்மை அனுதாபத்துடன் பார்க்கிறது.

இந்தியாவுடனான எமது உறவு பெரிய நெருக்கடிக் கட்டத்தை அடைந்துள்ளது.

பாக்குநீரிணைக்கு அப்பால் தேர்தல் ஆண்டின் உணர்வலைகள் இருப்பதை நாம் உணர வேண்டும்.

நெருக்கடி மோசமாகி வருகிறது. இந்தியாவில் கூட இது சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் குறைந்து வருகின்றன.

நெருக்கடி முற்றினால் இரு நாடுகளும் கஷ்டப்படும். ஆனால் இலங்கை அதிகமாகக் கஷ்டப்படும். இந்தியாவை நாம் எதிர்க்கக்கூடாது (உ-எ)

### எம் பிக்கள்-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டுக்களை நாம் மறுக்கிறோம்.

எம்மிடம் பயிற்சி பெற்ற — பாதுகாப்பு வழங்கக்கூடிய தோழர்கள் உள்ளதாக இலங்கையரசிடம் தெரிவித்தோம்.

அதன் அடிப்படையில் ரி-81 என்ற தானியங்கி ஆயுதம் எமக்கு வழங்கப்பட்டது.

இந்த ஆயுதம் வைத்திருப்பதற்கான அனுமதிப் பத்திரமும் (லைசென்ஸ்) எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சகல இயக்கங்களும் ஆயுதப் பாதுகாப்புடன் இருக்கின்றன.

நாம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் தற்பொழுதுதான் சட்டரீதியாக ஆயுதங்களை ஏந்தியுள்ளோம்.

இது தொடர்பாக இந்தியப் படையினருக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ 10)

### ஈ. பி. ஆர் எல். எவ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கிகள் வழங்கப்பட்டன.

எவருக்கு எதிராகவும் பாரபட்சம் காட்டும் எண்ணம் எமக்கு இல்லை.

நாடாளுமன்றத்தில்இருந்து வெளியேறாமல் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தினர் இது விஷயம் பற்றி என்னுடன் பேசியிருக்கமுடியும்—என்றார்.

(ஒ-எ)

### பல்கலைக்கழக..-.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது முதற்தடவையல்ல.

பெண்களை இராணுவ முகாம்களில் தடுத்து வைத்திருப்பது தமிழ்மக்களின் சகல மனித உணர்வுகளையும் உதாசீனம் செய்யும் செயலாகும். இவ்வாறு மாணவிகள் கூட தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுவது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாததும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டியதுமாகும்.

இவ்வாறான எழுந்தமானமான கைதுகளின் விளைவாகவே இன்று யாழ் பாடசாலைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இந்நிலையில் இவ்வாறான மனித உரிமை மீறல்கள், பிரச்சினைகளை மேலும் வளர்க்கவே உதவும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-எ)

## நெல்லியடியில் வெள்ளி இடம்பெற்ற அசம்பாவிதம்

வல்வெட்டித்துறை, ஜூலை 23

நெல்லியடியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணியளவில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதை அடுத்து 'பரா' வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு அதன் உதவியுடன் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சரமாரியான துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. ஷெல் வீச்சுக்களும் இடம் பெற்றன.

இரவு சுமார் 9 மணிவரை தாக்குதல்கள் தொடர்ந்தன.

இதனால் இராசகிராமம், கன்பொல்லை, மகாத்மா வீதிப் பகுதிகளிலுள்ள சில வீடுகள் சேதமடைந்தன.

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஏற்கனவே வெளியேறி இருந்ததால் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை. (ஒ-160)

## குத்துச் சண்டை; மைக்டைசன் சாம்பியன்

வாஷிங்டன் ஜூலை 23

அமெரிக்காவிலுள்ள அட்லாண்டிக் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலகக் குத்துச்சண்டைப் போட்டியில் அமெரிக்க வீரர் மைக்டைசன் சாம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

கார்ல் வில்லியம்ஸ் என்பவருடன் நடைபெற்ற இப் போட்டியில் தலாவகுசுற்று ஆரம்பித்த அரை நிமிடத்திலேயே அவரை வீழ்த்தி மைக்டைசன் உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

இப் போட்டியுடன் 37 போட்டிகளில் தொடர்ச்சியாக டைசன் வெற்றி பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர் மைக்கல் ஸ்பிங்ஸை ஒன்றரை நிமிடங்களில் இவர் வீழ்த்தியிருந்தார் என்பது தெரிந்ததே.

(ஒ-6)

## மாகாண சபை உறுப்பினர் கைதானார்!

கொழும்பு, ஜூலை 23

பதுளை ஆஸ்பத்திரியில் தொலைபேசி இயக்குநர் ஒருவர் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக மாகாண சபை உறுப்பினர். டபிள்யு விக்கிரமரத்தின என்பர் கைது செய்யப்பட்டார்.

அதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்த ஆஸ்பத்திரி ஊழியர்கள் கடமைக்கு மீண்டும் திரும்பினர். (உ-எ)

## கே.வி.கைதானார்

கொழும்பு, ஜூலை 22

கடந்த ஆண்டு அரசுடன் ஜே. வி. பியின் சார்பில் போலியான பேச்சுவார்த்தைகள் நடத்திய கே. வி. சேனநாயக்கா என்ற நபரை மிரிஹான பொலீஸார் கைதுசெய்தனர்;

நாவின்ன பகுதியில் தேசிய அடையாளக்கார்ட்டுகளை ஊர் மக்களிடமிருந்து சேகரித்துக் கொண்டிருந்த சமயம் இவர் கைதானார் அச்சமயம் இவரிடம் இருந்து பிஸ்டல் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

## கோஷ்டி மோதல் கட்டுப்பாட்டில்

மட்டக்களப்பு ஜூலை 23

கல்முனை பகுதியில் ஜிஹாத், இக்பால் ஆகிய இரு தீவிரவாத அமைப்புகளிடையே உருவான கோஷ்டி மோதல் உடனடியாக கட்டுப்படுத்தப்பட்டது.

(ஒ-21)

## காலக்கெடுவை தளர்த்த - - - - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்:

இந்தியா தனது துருப்புக்களில் ஒரு பகுதியை அடுத்த சில தினங்களில் திருப்பி அழைக்கத் தொடங்கினால், எஞ்சிய அமைதிப் படையினரை பூரணமாக விலக்கிக் கொள்வது பற்றிய பேச்சுக்களை ஆரம்பிப்பது சாத்தியமாகும் என்று திரு. பிரேமதாஸா தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார் என்று பி.பி.சி. அறிவித்தது.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் அமைதியையும் சகஜநிலையையும் கொண்டு வருவதற்கு இந்தியத் துருப்புக்கள் இருப்பது முட்டுக் கட்டையாக உள்ளது.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இரு நாடுகளுக்கும் சில கடப்பாடுகள் இருந்தன.

இலங்கை தனது கடப்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டது. அதிகாரப் பரவலாக்கல் குறித்து அர்த்தம் பொதிந்த நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காண அமைதிப்படை அவசியம் விலக்கப்பட வேண்டும்.

ஏனைய பகுதிகளிலும் பார்க்க வடக்கு-கிழக்கு பகுதியில் அமைதி நிலவுகிறதென்று பிரதமர் காந்தி கூறியிருக்கிறார். அது சரியென்றால், எதற்காக அமைதிப்படை வடக்கு-கிழக்குப்பகுதியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்?

[illegible]யின் ஏனைய பகுதிகளில் அமைதியின்மை நிலவுவதற்குக் காரணம், இந்திய அமைதிப்படை இந்த நாட்டில் இருப்பதே ஆகும்.

அமைதிப்படையை இலங்கையில் தொடர்ந்து இருக்க இந்தியா அனுமதிப்பது சட்ட விரோதமான செயல் ஆகும்.

யுத்த நிறுத்தம் செய்வதாக அறிவித்த ஒரு பிரிவினர் மீது இராணுவ நடவடிக்கையில் அமைதிப்படையினர் ஈடுபடுவது சட்ட விரோதமான செயல் என்பதையும் கூற விரும்புகிறேன்.

அமைதிப்படையை திருப்பி அழைப்பதில் உள்ள செயல் கட்டங்கள் பற்றி பேச்சுக்கள் நடத்தலாம்.

ஒப்பந்தத்தின்படி இலங்கை விரும்பினால் மட்டுமே இந்தியா இராணுவ உதவிகளை வழங்க வேண்டும்.

இவ்விடயங்களைக் கவனத்திற்கு எடுத்துக்கொண்ட பின்னரும் இந்திய அமைதிப்படை தொடர்ந்தும் இலங்கையில் இருக்கவேண்டும் என இந்திய அரசு வற்புறுத்தினால், இந்திய இலங்கை ஒப்பந்தம் இலங்கையின் இறைமைக்கு எதிரானதாகவே கருதவேண்டிய நிலை எமக்கு ஏற்படும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### வடக்கு ரயில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்த ரயில் ஒன்றும் இடைவழியில் நிற்பதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடந்த வெள்ளியன்று யாழ் வந்த சரக்கு மற்றும் பயணிகள் ரயில்களை திரும்பி இங்கிருந்து கொண்டு செல்ல ரயில் சாரதிகள் மறுத்ததை அடுத்து நேற்று தற்காலிக சாரதிகள் நியமிக்கப்பட்டு ரயில்கள் கொண்டு செல்லப்பட்டன.

மீண்டும் ரயில் சேவையை ஆரம்பிப்பது குறித்து அடுத்த சில தினங்களில் தீர்மானிக்கப்படும் என ரயில்வே அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. ஏரம்பு இரத்தினலிங்கம்
(ஆனைப்பந்தி)

ஏரம்பு இரத்தினலிங்கம் அவர்கள் 18 07-89 அன்று காலமானார்.

அன்னார் இளைப்பாறிய கலட்டி மிசன் பாடசாலை உதவி ஆசிரியரும், யாழ். சாந்தித் திரையரங்கின் உதவி நிருவாக இயக்குநரும், யாழ். நியூ புனிஸ், விஜித்திரா ஆகிய ரெக்ரைல்ஸ் உரிமையாளரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 271/2, நாவலர் வேன் ஆனைப்பந்தியில் உள்ள அன்னாரது இல்லத்தில் 24-7-89 திங்கள் காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
மனைவி, மகள், சகோதரர்கள்.
(11606)

### திரு. முனிஐயா தங்கவடிவேல்
[இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர்]

வண்ணை ஐயனார் கோவிலடியைப் பிறந்த இடமாகவும், அளவெட்டி வடக்கைப் புகுந்த இடமாகவும் கொண்ட திரு. வை. மு. தங்கவடிவேல் 19-07-1989 இல் சிவபதமடைந்தார். இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், வசந்தன், பிரபாகரன், வத்ஸலா (ஜேர்மனி), வைத்தியநாதன், முரளீதரன் ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், மாலினி, பாலேந்திரன், சிவானந்தவல்லி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், லாவண்ஜா, மாலவன், அச்சுதை, பிரபாலினி ஆகியோரைப் பேரப் பிள்ளைகளாகக் கொண்டவரும், புவனேஸ்வரி, நகுலேஸ்வரி, இராஜகோபால் (தபால் அதிபர்), மேனகேஸ்வரி, சந்திரேஸ்வரி, ரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரதராஜா (தபால் அதிபர்), கதிரேசர்பிள்ளை (ஆசிரியர்), நாகேஸ்வரி, வடிவேல் (C.T.B.), நாகராசா, வைத்தீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் 24-07-89 திங்கள் காலை 10-30 மணி அளவில் அளவெட்டி வடக்கில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மகன் த. வைத்தியநாதன்

அளவெட்டி வடக்கு. (T7458)

### திரு. இராமலிங்கம் கந்தையா
(பேருவளை பகிரங்க வேலைப்பகுதி ஓய்வுபெற்ற ஓவசியர்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் மேற்கில் வசித்தவருமாகிய திரு. இராமலிங்கம் கந்தையா அவர்கள் 18-07-1989இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. இராமலிங்கம், திருமதி இ. செல்வம் ஆகியோரின் அன்பு மகனும், திரு. இ. நகுலேசு [இளைப்பாறிய D. S. P. O), காலஞ்சென்ற திரு. இ. செல்லத்துரை (ஓவசியர் P. W. D), காலஞ்சென்ற திரு. இ. முருகேசு (பதவி நிலை உத்தியோகத்தர் இலங்கை வங்கி), திரு. இ. நடராசா, திருமதி P. சிவகாமி, திருமதி கி. இராசலட்சுமி, காலஞ்சென்ற திருமதி க. அன்னலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி யோகம்மா அவர்களின் அன்புக் கணவரும், திருமதி புஷ்பவதி குணரத்தினம், திரு. க. கணேசராஜா (திட்டமிடல் உத்தியோகத்தர், கட்டார்) திருமதி கமலாதேவி விஜயேந்திரன், திரு. க. மகானந்தன் (பொறியியலாளர், லண்டன்), திருமதி மங்களேஸ்வரி கைலைநாதன் (டாக்டர், சிம்பாவே), திரு. க. குகனேசராஜா (பொறியியலாளர், லண்டன்), திருமதி புனிதவதி ஜெகதீசன், திருமதி ஞானதிலகம் ஜெயசிறி ஆகியோரின் அன்புத் தந்தையும், பேராசிரியர் க. குணரத்தினம் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், தற்போது U. K.), திருமதி சிவராணி கணேசராஜா, திரு. சி. விஜயேந்திரன் (பொறியியலாளர், புறூனை), திருமதி மீனாம்பிகை மகானந்தன் (பொறியியலாளர், லண்டன்), திரு. ந. கைலைநாதன் (பொறியியலாளர், சிம்பாவே), திரு. இரா. ஜெகதீசன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), திரு. சி. ஜெயசிறி (பொறியியலாளர், சவூதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கு. தயாபரன் (வைத்திய மாணவன், யாழ். பல்கலைக் கழகம்), கு. குமுதினி, வி. மகிந்திரன், வி. லோகினி, க. கணேஷ்குமார், வி. சுஜேந்திரன், கு. ஜயந்தினி, கை. ஐங்கரன், க. நந்தகுமார், கை. கந்தனி, ஜெ. துர்க்காஷினி, ஜ. துவாரகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 23-7-89 மு. ப. பதினொரு மணிக்கு அன்னாரின் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி க. யோகம்மா

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (1261)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 382/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 07 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org